Phone No. 4502 Regd. No. M. 5458

விலை அரை அணா

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A. MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1 | சென்னை (2—10—49) வெளியீடு (3—10—49) | இதழ் 54

பாசீச ஸ்பெய்னுக்குப் பந்தியில் முதலிடம்!

சர்வாதிகார பலி பீடத்தில் ஜனநாயகம்!

முதலாளித்துவ மூர்க்கத்தனத்திற்கு சமதர்மத்தின் பணிவு!

டாலர் நாவசைக்கிறது - ஸ்டர்லிங் பின்பற்றுகிறது!

அந்த உறவு வேண்டுவோருக்கு இது ஒரு எச்சரிக்கை

ஸ்பெய்ன் நாட்டின், ஜெனராலிஸிமோ பிராங்கோவின் பாசீச ஆட்சியை, கம்யூனிஸ்டுகளோ அல்லது வேறு ஜனநாயக சக்திகளோ, வீழ்த்தப்படுவதை, அமெரிக்கா அனுமதிக்காது.

பிராங்கோவின் சர்வாதிகார ஆட்சியைக் கொஞ்சம் தளர்த்திவிடும் வகையில், பிரிட்டனும் அமெரிக்காவும் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும், ஸ்பெய்னின் தற்கால அதிகார வர்க்கத்தை இறுதியாக ஒதுக்கிக்கொள்ளும் சூழ்நிலையை உண்டாக்குவதற்கான நடவடிக்கைகளை, இரு நாடுகளும் சாவதானமாக மேற்கொள்ள வேண்டுமென்றும் அமெரிக்கா விரும்புகிறது.

அமெரிக்க அதிகாரி டீன் ஆக்கிசன் இவ்வாறு கூறினதை, பிரிட்டிஷ் வெளிநாட்டு மந்திரி எர்னஸ்ட் பெவின் திருப்தியுடன் கேட்டுக்கொண்டு, பிராங்கோவிற்கு எதிரிடையாக, பிரிட்டனிலும் சிறப்பாக பிரான்சிலும் மக்களின் மனோபாவம் இருக்கிறது என்பதை எடுத்துக் காட்டினார்.

அமெரிக்கக் கடற்படையின் தலைவர் கானலி சமீபத்தில் ஸ்பெய்னுக்குப் போனபொழுது, ஸ்பெய்னில் உள்ள கப்பல் தளத்தை, தேவையான பொழுது அமெரிக்கா பயன்படுத்திக்கொள்ளலாம் என்று, பிராங்கோ அனுமதித்திருப்பதாகவும், டீன் ஆக்கிசன் பெவினிடம் கூறினார்.

சேதியைப் பார்த்தீர்களா? பல முறைப் படித்துப் பாருங்கள்! அமெரிக்காவின் ஜனநாயகப் பற்று, எந்தெந்த உருவில் காட்சி அளிக்கிறது என்பதை ஆராய்ந்து உணருங்கள். ஏன் இப்படி அமெரிக்காவின் கண்ணும் கருத்தும் கெட்டுக் கிடக்கிறது?

சென்ற போரின் போது, பாசிசம் நாஜிசம், மனிதப் பண்பாட்டை, மனித நாகரிகத்தை, மக்களாட்சிமுறையின் மாண்பை அழித்துவிட எழுந்த காட்டுமிராண்டித்தனம் என்று, அமெரிக்கா கர்ஜனை புரிந்துவந்ததையும், அதற்காக நாஜிசக் கொடுமையிலிருந்து உலகத்தைக் காப்பாற்ற போரில் குதித்ததையும்,—பாசிச ஸ்பெய்ன் சர்வாதிகாரி பிராங்கோவோடு இன்று கட்டித் தழுவி கைலாகு கொடுக்கும் காட்சியையும், கருத்துள்ளோர் சீர்தூக்கிப் பார்க்கட்டும். அன்று ஜனநாயகத்தைக் காக்க, ஹிட்லர் முறையை எதிர்த்து ஒழித்த அமெரிக்கா, இன்று எதனைக் காக்க, எவரின் நல்வாழ்வு பாதுகாப்புக்காக, பாசிசப் பிராங்கோவிற்கு பக்கத்துணை நிற்க முற்படுகிறது? பாசிச பிராங்கோவை, அவர் ஆட்சியின் போக்கு இன்றுள்ளது போலவே இருக்கும்வரை அவருடன் ஒத்துழைப்பதும், அவருக்கு ஆதரவு காட்டுவதும், நேர்மையானது அல்ல என்பதை அமெரிக்கா உணர்ந்துதான் இருக்கிறது. இதன் காரணமாகத்தான், பிராங்கோவின் ஆட்சிப்போக்கில் கணிசமான மாறுதலைச் செய்ய, பிரிட்டனும் அமெரிக்காவும் முயலவேண்டுமென்று, அமெரிக்க அதிகாரி டீன் ஆக்கிசன், பிரிட்டிஷ் மந்திரி பெவினுக்கு போதனை புரிகிறார். பிராங்கோவிற்குப் பாதுகாப்பு அளிப்பது நீதியானதுதான், அதில் முரண்பாடு எதுவும் கிடையாது என்று உறுதியான நம்பிக்கை அமெரிக்காவிற்கு இருக்குமானால், பிராங்கோவின் பாசீச நிர்வாகத்தைத் தளர்த்தித்தான் ஆகவேண்டும், அதற்கான முயற்சி எடுக்கத்தான் வேண்டும் என்ற எண்ணம், ஆக்கிசனுக்கு வந்திருக்க முடியுமா?

பாசிசக் கொடுமையை-மிருக சுபாவத்தை— அநாகரிகத் தன்மையை-உலகமக்களுக்கு விளக்கமாகத் தெரிவித்தவர்கள், சொல்லாலும் செயலாலும் அதனை ஒழித்துக் கட்டப்போரிட்டவர்கள், பொதுவாக அரசியல் அறிஞர்களும் குறிப்பாக ஒவ்வொரு நாட்டின் அதிகாரவர்க்கத்

[தொடர்ச்சி 3-ம் பக்கம் பார்க்க]

சென்னை தமிழர்க்குத்தான் சொந்தம்

எதற்காகவோ சொல்லியதை எதற்கோ எடுத்து வைத்துக்கொள்வதா?

ஆந்திரர்களின் விஷமப் பிரசாரம்

சென்னை நகரம், தமக்குச் சொந்தம் என்று, ஆந்திரர் வாதிடுவதும், போரிடுவதும் நேர்மை அல்ல.

மொழிவழி வட்டாரங்கள்; அமையும் திட்டப்படி, சென்னை தமிழருக்குச் சொந்தமாகியே தீரவேண்டும். தமிழர், தெலுங்கர், மலையாளி, என்று மொழி உணர்ச்சி காரணமாக பேத எண்ணம் ஏற்படாதிருந்தால், சிக்கலும் சங்கடமும் விளைவிக்கும் இந்தப் பிரசனை கிளம்பியிருக்காது.

மொழிவழி வட்டாரங்கள்; அமையும் திட்டம், காங்கிரசின் மூலம் வலியுறுத்தப்பட்டது.

அதன்படி, பார்க்கும்போது, சென்னை தமிழருக்கே சொந்தம் என்பது மறுக்க முடியாததாகும். இதனைத் திராவிடர் கழகம் பன்முறை விளக்கமாகக் கூறி இருக்கிறது.

சில நாட்களுக்கு முன்பு 'விடுதலை' இதுபற்றித் தீட்டிய தலையங்கத்தில், சென்னையைத் தமதாக்கிக் கொள்ளவோ, துண்டு போடவோ, டில்லியிடம் ஒப்படைக்கவோ, ஆந்திரர் முயற்சித்தால், 'நவகாளி' நிலைமை ஏற்படும் என்று கூறியிருக்கிறது. இவ்வளவு தெளிவாகக் கருத்து வெளியிடப்பட்டிருந்தும் தமது திருச்சி சொற்பொழிவிலே, கூறிய கருத்தை, வேண்டுமென்றே, விஷமத்தனத்துக்காகத் தவறாகப் பயன்படுத்திக் கொண்டு, பெரியார், தமிழருக்கு, திருச்சியே தலைநகரம் என்று கூறி விட்டார், அதுபோலவே தான் இருக்கவேண்டும், "மதராஸ் மனதே!" என்று எழுதியும் இதையே சாக்காகக்கொண்டு புலுசு சாம்பமூர்த்தி, மாஜி கமிஷனர் சுப்பையா நாயுடு, சாமி வெங்கடாசலம் ஆகியோர் பேசியும் வருகின்றனர். இது அக்ரமம். எதற்காகவோ கூறப்பட்டதை வேறு எதற்கோ எடுத்துவைத்துக்கொண்டு வாதிடும் விஷமத்தனத்தை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்!

பெரியார், சென்னை தமிழருடையதல்ல — ஆந்திரா சுருட்டிக் கொள்ளட்டும் என்று கூறினதில்லை.

சென்னை, தமிழருக்குத்தான் சொந்தம் என்பதை, எவ்வளவு கட்சித் தமிழரும் கூடிப்பேசித் தெரிவிக்கவேண்டும். அதற்காக, 'ராஜாஜி ஆவில்' ஒரு கூட்டம் வேண்டுமானால் ஏற்பாடு செய்யுங்கள், என்றுகூட எழுதியிருந்தார்.

இப்படி இருக்கும்போது ஆந்திரர், தமது பேராசை காரணமாகப் பெரியார்பேச்சைத்திரித்துக்கூறித் தமக்குச் சாதகமாக்கிக் கொள்ள முயற்சிப்பது, அக்ரமம். இன்னும் சில தினங்களில், சென்னையில், ஆர். கே. சண்முகம் தலைமையில், சென்னை தமிழருக்குத்தான் சொந்தம் என்பதை வலியுறுத்த ஓர் கூட்டம் நடைபெற இருக்கிறது என்பதை அறிய அகமகிழ்கிறோம். அந்தக்கூட்டம், தமிழர்களுக்குள் கருத்து வேற்றுமை துளியும் கிடையாது என்பதை உறுதிப்படுத்தும் என்று நம்புகிறோம்.

நேர்மையற்ற முறையில், ஒரு தலைவரின் பேச்சைத் திரித்துப் பயன்படுத்திக்கொள்ளப் பார்க்கும், சில ஆந்திரத் தலைவர்களின் அசாமப் போக்கை வன்மையாகக் கண்டிக்கிறோம். இந்த விதமான அக்ரமங்களின் மூலம், சென்னையை அபகரித்துக் கொள்ளலாம் என்று எந்த ஆந்திரத் தலைவராவது எண்ணினால், ஏமாற்றமடைவது திண்ணம் என்பதையும் எடுத்துரைக்க விரும்புகிறோம். வேண்டாம் இந்த அக்ரமம் என்று எச்சரிக்கை செய்கிறோம்.

விலை ஏற்றத்தைத் தடுக்கும் வேலை நடக்கிறதா?

பொருள்களின் விலை வாசிகள் நாளுக்கு நாள் உயர்ந்து கொண்டே போகின்றன. டாலர்-ரூபாய் மதிப்புக் குறைவினால், அமெரிக்க நாட்டுப் பொருள்களின் விலை ஏறி விடுவது இயற்கை என்றும், மற்றப் பொருள்களின் விலைகள் உயரா என்றும் பொருளாதார அறிஞர்கள் ஆட்சியாளர்கள் முதலியோர் கூறினர்.

ஆனால் இன்று நாட்டிலே, உப்பு, புளி, மிளகாய் முதல், காய் கறிகள், கீரை முதலியவைகளும் விலை ஏறி விட்டன. சர்க்கரை கிடைப்பது அரிதாகி விட்டது. மற்றும் வாழ்க்கை விகிதம் சகிக்க முடியாத அளவுக்கு ஏற்ற மடைந்து விட்டிருக்கிறது. இவை மக்கள் அன்றாடம் அனுபவிக்கும் உண்மையாகும்.

விலைவாசிகள் இவ்வாறு உயருவதைத் தடை செய்ய அவசர நடவடிக்கைக் கமிட்டி ஒன்று அரசாங்கத்தாரால் ஏற்படுத்தப்பட்டு, அக்கமிட்டி உடனடியாகச் செயலில் இறங்கி, சணல் வர்த்தகத்தில் முட்டுக்கட்டைப் போட்டு, அதன் விலைகளைக் குறைக்க வழி கோலி விட்டது என்று தேசியத்தாளர்கள் விளம்பரப் படுத்தத் தொடங்கி விட்டன.

விலைவாசிகள் உயருவதைத் தடை செய்ய நியமிக்கப்பட்ட கமிட்டி செய்ய வேண்டிய முதல் வேலை இதுதானா? நாணய மதிப்புக் குறைவினால், உள்நாட்டு வாணிபம் எவ்வகையிலும் பாதிக்கப்பட வழியேயில்லை என்றும், விலைவாசிகளின் உயர்வு தடுக்கப்படவேண்டுமென்றும் இந்திய முதலாளிகள் கூறியுள்ளனரே, அவ்வாறு உள்நாட்டில் ஏறபட்டிருக்கும் வாணிகம் [illegible] போக்கையை [illegible] கும் புத்தியை அல்லவா முதலில் தடைசெய்திருக்க வேண்டும்? இப்படிச் செய்திருந்தால், அன்றாடத் தேவைக்குரிய பொருள்களின் விலை [illegible] குறைந்து ஓரளவுக்காவது ஆறுதல் அடைய முடிந்திருக்கும்! ஆனால், அக்கமிட்டி சணல் விலையைக் குறைக்க வழி கோலிவிட்டது. எவ்வளவு அசாமான-அவசியமான வேலை பார்த்தீர்களா? விலைகளை உயர்த்திக் கொள்ளையடிக்க முயலுபவர்களை நடுச்சந்தியில் வைத்துச் சவுக்கால் அடிக்கவேண்டுமென்று கூறினரே ராஷ்டிரபதி பட்டாபி. ஒருவராவது அடிக்கப்பட்டனரா?

ஆனால், உருப்படியான வேலை ஒன்றும் நடைபெறு விட்டாலும், நடந்து போலக்காட்ட [illegible] பத்திரிகை [illegible] ஆ [illegible] பீடத்தி [illegible] காக்கப்போ [illegible] ஏன் படப்போகிறது?

திருமால் திருடப்பட்டார்

[illegible]

இந்திய கலாசாரத்தில் பெசண்ட் அம்மையார் கண்ட பெருமை

அன்னி பெசண்ட் அம்மையார் கண்ட அரசியல்-மத இயக்கங்களில் பெரும்பங்கெடுத்துத் தோளோடு தோளுற நின்று பணியாற்றியவர்களுள் ஒருவர் சர் சி. பி. இராமஸ்வாமி ஐயர். அவர் அன்னிபெசண்ட் அம்மையாரின் சேவையைப்பற்றிச் சென்னையில் பேசியபோது,

"இந்தியப் பழக்கவழக்கங்களிலும் கலாசாரத்திலும் டாக்டர் பெசண்டிற்குத் தனி மதிப்பும் பெருமையும் உண்டு. சாஸ்திரங்கள் சாஸனத்தின் பெருமையையும் குறைநிசயங்களையும் அவர் அன்றே அறிந்திருந்தார்"

இந்தியக் கலாசாரம் சாஸனத்தின் குறைநியங்களில் புகுந்து கொண்டிருப்பதை அவர் அறிந்ததைத்தான் தோழர் சர் சி. பி. குறிப்பிட வேண்டுமா? இந்தியக் கலாசாரத்தின் பெருமையைக் காட்ட வல்லது சாஸனம் மட்டுமல்லவே, நீண்டாமை என்ன? வர்ணாச்சிரம தர்மம் என்ன? மனுஸ்மிருதி என்ன? பாரதம் போன்ற இதிகாசங்களென்ன! இன்னும் இவைபோன்ற எவ்வளவோ இருக்கின்றனவே, இவைகளையெல்லாம் அவ்வம்மையார் காணவில்லையோ! இவை அவ்வம்மையாருக்கு பெருமைமிகு இந்தியக் கலாசாரமாகத் தோன்றவில்லையோ! சாஸனத்தைவிட இவை மிகச் சிறந்தவை அல்லவா?

போதனை பிறருக்கு!

"தங்கள் கோட்பாட்டின் சிறப்பை மக்களுக்கு அமைதியான வழியில் எடுத்துக் காட்டி அவர்களுடைய மனதைத் திருப்புவதில் கம்யூனிஸ்டுகள் சிரத்தைக் கொள்ளவில்லை. அந்த வழியில் பெரும்பாலான மக்கள் மனம் மாறி அவர்களுடைய திட்டத்தை ஆதரிக்க முற்படுவராயின், அந்த முடிவுக்கு அனைவரும் பணிந்தேயாக வேண்டும்"

—ச. மி.

திராவிட முன்னேற்றக்கழக துவக்க விழாக் கூட்டங்கள்

16-10-49

கோவை:—	சி. என். அண்ணாதுரை, எஸ். ஆர். சுப்பிரமணியம், பெத்தாம்பாளையம் பழனிச்சாமி.
திருச்சி:—	இரா. நெடுஞ்செழியன், எஸ். அப்பாவு.
விருதுநகர்:—	என். வி. நடராசன், ஏ. வி. பி. ஆசைத்தம்பி.
மதுரை:—	என். ஜீவரத்தினம், டி. கே. சீனிவாசன்.
தூத்துக்குடி:—	காஞ்சி. கல்யாணசுந்தரம், மு. கருணாநிதி,
வேலூர்:—	சி. பி. சிற்றரசு, கே. ஏ. மதியழகன்.
குறிஞ்சிப்பாடி:—	காஞ்சி. மணிமொழியார், இரெ. இளம்வழுதி.
தஞ்சை:—	ஈ. வெ. கி. சம்பத், என். எஸ். இளங்கோ.
காஞ்சிபுரம்:—	கே. அன்பழகன், சத்தியவாணிமுத்து.
திண்டுக்கல்:—	எஸ். கே. சாமி, தங்கப்பழம்.

17-10-49

சேலம்:—	சி. என். அண்ணாதுரை, ஏ. சித்தையன்.
கோவில்பட்டி:—	காஞ்சி கல்யாணசுந்தரம், மு. கருணாநிதி.
புதுக்கோட்டை:—	என். எஸ். இளங்கோ, என். ஜீவரத்தினம்.
மாயவரம்:—	ஈ. வி. கே. சம்பத், இரெ. இளம்வழுதி, டி. கே. சீனிவாசன்.
திருப்பத்தூர்:—(வ.ஆ.)	கே. ஏ. மதியழகன், சி. பி. சிற்றரசு.

18-10-49

உடுமலைப்பேட்டை:—	சி. என். அண்ணாதுரை, எஸ். ஆர். சுப்பிரமணியம்.
பட்டுக்கோட்டை:—	என். வி. நடராசன், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, ஈ. வெ. கி. சம்பத்.
திருவண்ணாமலை:—	சி. பி. சிற்றரசு, கே. ஏ. மதியழகன்.

19-10-49

பொன்மலை:—	என். வி. நடராசன், ஏ. வி. பி. ஆசைத்தம்பி.

20-10-49

விருத்தாசலம்:—	என். வி. நடராசன், சி. முனுசாமி.

23-10-49

வேலூர் (வ. ஆ.):—	சி. என். அண்ணாதுரை, சி. பி. சிற்றரசு.

உலகக்கூடம்

['சம்மட்டி']

'சார்! சார்!' என்றான் தாஸ், ஆபீஸ் பையன்.

'வேளை நேரம் இல்லாமே ஏண்டா தொந்தரவு பண்ணிறே' என்றேன் நான்.

'வேற ஒண்ணுமில்லே! ராத்திரி ஒரு கனவு கண்டேன் சார்! அதை உங்ககிட்ட சொல்லலாமுன்னு!.........

'எவ்வளவு திமிருடா உனக்கு? பெரிய மனுஷன் கனவு கண்டுட்டானாம்! அதை நான் கேட்டுக்கிட்டு ஆகணுமா! உதைக் கழுதை!' என்று கோபித்துக்கொண்டு முறைத்துப் பார்த்தேன் ஆபீஸ் பையனை. மலர்ந்திருந்த முகம் சுண்டிவிட்டதைக் கண்டேன். என்னுள் கோப சுபாவத்தை, நானே கடிந்து கொண்டேன். 'எந்த ஊர் இராஜா ஆகப்போகிறான்—எந்த நாட்டு இளவரசியை மாலைசூடப்போகிறான். கேட்டுத்தான் தெரிந்துகொள்வோமே!' என்று எனக்கு ஏற்பட்ட சபலம், என் அடக்குமுறையை மீறிக்கொண்டு, வெற்றிபெற்று வெளிவந்துவிட்டது.

'தாஸ்! தாஸ்!'

'ஏஞ்சார்!'

'என்னடா கனவு கண்டே சொல்லுடா!'

முகத்திலே முன்பிருந்த மலர்ச்சி இல்லை—வார்த்தையிலே மகிழ்ச்சி இல்லை—விநயத்தை மட்டும் தயங்கித் தயங்கிக்கூறினான்.

'ஒண்ணுமில்லே சார்! எங்கத் தெருவிலே குடியிருக்கிற ரிக்சாகாரனுங்க, நேற்று பொழுதோட, ரிக்சா வண்டிங்களுக்கெல்லாம் தண்ணி ஊத்திகழுவி, விபூதிப்பட்டை போட்டு, பூசை போட்டானுங்க! சார்!' என்றான்.

'கனவு கண்டேனுன்னு சொல்லிவிட்டு, பார்த்த கதையை பேசறயடா!'

'கனவிலும் அதானுங்க கண்டேன்!'

'சரி! சரி! போடா!'

* * *

கொஞ்சநேரம் கழித்து மறுபடியும் 'சார்! சார்!' என்ற குரல் ஆபீஸ் பையனிடமிருந்து வந்தது. ஒரு பத்திரிகையிலிருந்த படத்தைப் பார்த்துப் பார்த்து சிரித்துக்கொண்டே உள்ளே வந்து, அதனைப் பார்க்குமாறு கேட்டுக் கொள்வது போல, அதனை என்னிடம் நீட்டினான். பார்த்தேன்; பிரமித்துப் போனேன்!

வேறு ஒன்றுமில்லை என்னுடைய ஆச்சரியத்துக்குக் காரணம். நான் பார்த்த படத்தில் இயந்திரக் கலப்பைக்கு முன் சூடம் கொளுத்தித் தேங்காய் உடைத்து வைக்கப் பட்டிருந்தது. அதுவுமல்லாமல் அதனை, நமது பிரதம மந்திரி ஜவஹர்லாலும் வேறு சிலரும் கண்டு மகிழ்ந்துகொண்டு இருப்பதையும் அப்படத்தில் கண்டேன் எனக்குத் திகைப் பேற்பட்டது. அதுவே, ஆபீஸ் பையனுக்கும் சிரிப்பைக் கொடுத்தது!

'ஏன் சார்! ரிக்சா வண்டிக் காரனுங்க பூசை போட்டதுக்கு, 'முட்டாள் தனமுன்னு' சொல்லிட்டிங்களே, இதுக்கு என்னுங்க சொல்லப் போறீங்க?' என்று கேட்பது போல் இருந்தது, ஆபீஸ் பையன், படத்தையும் என் முகத்தையும் மாறி மாறிப் பார்த்தது!

* * *

ஒன்றுமே எழுதப் பிடிக்கவில்லை. இந்தப் படத்தில் கண்ட காட்சியிலேயே என்னுடைய கருத்து முழுதும் படிந்து போய்விட்டது! ஏதேதோ, சிந்தனுலோகத்தில் கண்டு கொண்டு இருந்தேன்.

வீணையின் நாதம் கேட்டது. இசை வந்த திக்கு நோக்கினேன். நல்ல மணமும் என் நாசியில் நுழைந்தது. மகிழ்ந்தேன். தூய தும்பை மலர் நிற ஆடை உடுத்திய, கரங்களில் வீணை ஏந்திய, அழகிய மாது ஒருத்தி, நாதத்தையும் நறுமணத்தையும் தொடர்ந்து வந்தாள் என் அருகில். ஆச்சரியத்தோடு, கண்களைச்சற்று அகலமாக ஆக்கிக் கொண்டு, அவளையே இமை கொட்டாமல் நோக்கினேன்!

'எழுத்தாளி' என்றாள்! நாதம் நின்றது!

'உற்று நோக்கினேன்!'

'நான் மேலை நாட்டுக் கலைமகள்!' என்றாள்!

'வாரும்—அமரும்— வந்த வகை கூறும்!' என்றேன்.

அவள் கண்களுக்குக் கண்ணீர் கவசம் போடப்பட்டிருப்பதைக் கண்டேன். நெஞ்சம் தழதழத்து இருப்பதையும் உணர்ந்தேன், அவள் உரையைக்கேட்டு!

'ஏனம்மா அழுகிறாய்?' என்றேன்.

'என் உடன் பிறந்தாளைக் கண்டிருந்தால், நீர், இந்தக் கேள்வியைக் கேட்கத் துணிவு கொள்ளமாட்டீர்!' என்றாள்.

'ஏன்! எங்கே அவள்! என்ன அவளுக்கு?' என்றேன்.

'அவள் விலங்கிடப்பட்டு இருக்கிறாள்!' என்றாள்.

'ஏன் உடைத்தெறியக் கூடாது' என்று கேட்டேன்.

'முடியாது! இன்னும் நீண்ட நாள் பொறுத்திருக்க வேண்டும்!' என்றாள்.

'விபரமாகப் பேசுங்கள்! விளக்கமாகக் கூறுங்கள்!' என்றேன் நான்.

'நான் மேலைநாடு! என்பெயர் கலைமகள், என் தங்கை இங்கு உள்ளாள், அவளைக்காண வந்தேன். கண்டதும் வேதனை கொண்டேன். என்னையும் அறியாமல் என் விழிகள் நீரைப் 'பெருக்குகின்ற'...... (கொஞ்சம் தயக்கம்)... அவளுக்கு உபசாரங்கள், இங்கு ஏராளமாக நடத்தப்படுகின்றன! படையல் போடுகிறார்கள்! அவள் மீது பதிகம்பாடுகிறார்கள்! பக்தி காட்டுகிறார்கள்! அவ்வளவுதான்! திருப்திப்பட்டு விடுகிறார்கள்!'

"கற்சிலையாக்கப் பட்டிருக்கிறாள், என் தங்கை, இந்த பக்தர்களால்! ஓவியச்சிறையில் அடை—நடப்—ட்ருக்கிறாள் இந்த மக்களால்! அவளால் கைகால்களை அசைக்க முடியாத அளவிற்குத் தளைகள் பூட்டி விட்டிருக்கிறார்கள். கோபத்தோடு இருக்கிறாள். பக்தர்கள் மீது பாசம் காட்டுவதற்குப்பதில், பயங்கரமானச் சாபம் கொடுத்துக்கொண்டே இருக்கிறாள். என்னைப்போல, சுயேச்சை அளிக்கப் பட்டால் தான், அவள் நாடெங்கும், மக்களிடமெல்லாம் நடமாடுவாள். அவள் அனுக்கிரகமும் மக்களுக்குப் பயன்படும்."

"என்னைப்பார், எங்கெங்கு வேண்டுமானாலும் செல்லுகிறேன். என் மக்களையும் ஆசீர்வதிக்கிறேன். அவர்களும் என்னை, தாங்கள் செய்யும் ஒவ்வொரு செயலிலும் கண்டு களிக்கிறார்கள். என் எழிலும் ஆற்றலும் வளர்ந்து கொண்டே போகிறது."

'என் திறமையால் இங்கு வந்து இருக்கும், என் பல உருவங்களிலே ஒன்றான ட்ராக்டர் இயந்திரத்திற்கும், பூஜை போட்டு மகிழ்கிறார்களே, பொருந்துமா இது? இதனைப் பார்க்கிறபொழுது, என் தங்கையைச் சிறையில் தள்ளித் துன்புறுத்துவது போல, என்னையும் சிறைபிடித்து விடுவார்களோ என்று, எனக்கு அச்சமாக இருக்கிறது!" என்னமோ மேலும் சொல்லுவதற்காகத் தயக்கம் காட்டும்பொழுது, 'சார்! சார்! தேள்!' என்றான் ஆபீஸ்பையன். திடுக்கிட்டு எழுந்தேன் நாற்காலியை விட்டு! தேடினேன், 'ஓட்டடை' சார்!' என்றான் ஆபீஸ் பையன்!

உண்ண உணவில்லாத போது உடலூட்டத்திற்கு வழிசெய்வது எப்படி!

காட்டு மக்களின் உடலூட்ட நிலையைக் கவனித்துவருகிற உள்ள அலுவலர் டாக்டர் ராவ். "நம் காட்டு மக்கள், சிறப்பாக அரிசியை முக்கிய உணவாக உட்கொள்ளும் மக்கள் உடலூட்டம் தரவல்ல உணவு வகைகளை உண்ணுமாறு செய்தல் நலம். அல்லது அவர்களுடைய அரிசி உணவை ஊட்டமுள்ள உணவாக ஆக்கத்தக்க துணைப் பொருள்கள் சேர்க்கப்பட வேண்டும்" என்று கூறியுள்ளார்.

நாட்டிலே இன்று வெறும் அரிசியைக் கஞ்சியாகக் காய்ச்சிக் குடிப்பதற்கே போதிய அளவு தரப்படவில்லை. இலட்சக்கணக்கான ஏழை மக்கள் முழுவயிறு உணவு உண்டு வருடக் கணக்கிட வேண்டிய நிலை வந்துவிட்டது. காங்கிரஸ் ஆட்சி பீடத்திலமர்ந்த பின். இதுவரை இன்றும் வயிறார உண்ணுவதற்கு அரிசியே வழங்கப்படவில்லை. இந்த நிலையில் ஊட்டச் சத்துள்ள உணவு எங்கே போவது?

ஆனால் ஒன்றுமட்டும் டாக்டர் ராவின் முயற்சியினால் நடைபெறக்கூடும். ஊட்ட உணவு ஆராய்ச்சி நிலையங்கள், பிரசாரகர்கள், ஆராய்ச்சிக்காரர்கள், இயக்கம் என்ற பெயர்களுடன் நிலையங்கள் சில ஏற்படவும், சிலர் பதவிகள் பெறவும் இடமேற்படலாம்.

இனி நடப்பவை

வத்தலக்குண்டு- வத்தலக்குண்டு நகர திராவிட முன்னேற்றக் கழக அமைப்புக் கூட்டம், 3-10-49 திங்கள் இரவு 8 மணிக்கு, தோழர் சு. குழந்தைவேல் அவர்கள் கடையில் நடைபெறும். தி. மு. கழகத்தில் ஆர்வமுள்ள தோழர்கள் அனைவரும் வரும்படி தோழர் ... சாமி அழைக்கிறார்.

[illegible] ஸ்டாலினுக்குப் . . .

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இன்றுமேயாகும் அரசியல் தலைவர்கள் சொற்கேட்டு, பாசீச அக்கிரம ஆக்கிரமிப்பை அடக்கி ஒழிக்க, தங்கள் ஆருயிரைப்பணயம் வைத்து, பலப்பல போர்க்களங்களிலே ஆர்வத்தோடு போரிட்டு, அணையிட்டுத்தடுத்தனர் அநாகரிகப்பரவலை—சர்வாதிகாரக் காட்டுமிராண்டி ஆட்சியை, இலட்சக்கணக்கான மக்கள். எந்தப்பணியை உயர்ந்தப் பணியாகக்கண்டு, உலக நல்வாழ்விற்கு ஏற்ற ஏற்பாடு என்று கொண்டு, முடிவு வரைப் போராடி, பாசிசசனியனுக்குச் சமாதி கட்டி மகிழ்ந்தார்களோ மக்கள், அதே மக்களின் கண்களுக்குமுன்னால், பாசிசப்பேயுக்குப் பாதுகாப்புத்தேடும் தொண்டு செய்யப்படுகிறது என்றால் — அதுவும் பாசிசம் பாழ்பட்டக் கொள்கை என்று கூறியவர்களாலேயே அந்த வினை யாற்றப் படுகிறதென்றால், எப்படி இருக்கும் மக்களின் மனம்? கொந்தளிக்காதோ! குமுறாதோ! அரசியல் சூதாடிகளை சபிக்காதோ!

கம்யூனிசக் கோட்பாடுகள் மீது கொண்டுள்ள கசப்பு—குரோதம், அமெரிக்க முதலாளித்துவத்திற்கு, பாசிசத்தைக் கட்டித் தழுவும் கருத்தைக் கொடுத்து இருக்கிறது. ஜனநாயகக் கோட்பாடுகளைக் கொன்றுவது, பாசிச சர்வாதிகாரத்தை கட்டிக்காக்க வேண்டுமென்ற கவலை; புகழ்ந்து பேசி வரும் மக்களாட்சிக் கோட்பாட்டுக்கு விரோதமாக - அமெரிக்காவிற்கு இன்று ஏற்பட்டிருக்கிறது! இதனால் காப்பாற்றப்பட இருக்கிறது. மக்களாட்சி முறையல்ல; பாசிசப் பரவல மக்களாட்சியைக் கெடுக்கும் என்று முன்பு செயலளவில் காட்டி இருக்கிற பொழுது. இன்று பாசிசப் பாதுகாப்புக தொண்டுசெய்வது மக்களாட்சிப்பாதுகாப்பாக எவ்வாறு இருக்க முடியும்? எது காப்பாற்றப்பட இருக்கிறது? முதலாளித்துவம்-அமெரிக்க - முதலாளித்துவம்! பாசிசக் கட்டத்தை அடைந்துவிட்ட அமெரிக்க முதலாளித்துவம்!

பெவின், உள்நாட்டிலே சமதர்மி; வெளிநாட்டிலே விஷமி! அமெரிக்கா முதலாளித்துவ நச்சுருணையிலே சிக்கி நசுக்கிக் கொள்ளுகிறார், பலநாள் பயிற்சியை-மக்களாட்சிப் பண்பாட்டை! பிராங்கோவிற்கு ஆதரவு என்றால், பிரிட்டிஷ் மக்கள் கோபிப்பார்களே என்று பயந்து பயந்து பேசுகிறார்! பிரெஞ்சு மக்கள் பதை பதைத்து, எழுவார்களே எதிராக என்று ஏக்கத்தோடு எடுத்துக்காட்டுகிறார்.

ஆக்கிசான், 'முயலுக! முயற்சி எடுத்துக்கொள்க! எச்சரிக்கையாக நடந்துகொள்க! பாசிசத்துக்குப் பாதுகாப்புத் தேடுக! மக்கள் மனவளத்தில் மாறுதலை உண்டாக்குக!' என்கிறார், பெவினைப் பார்த்து. ஆணையல்ல இது — அன்புரைதான்! ஸ்டர்லிங் மதிப்பைக் குறைத்துக் கொண்ட சமதர்மிகளுக்கு, சமதர்மத்தின் மதிப்பை—தத்துவத்தைக்கொஞ்சம் குறைத்துக்கொள்வது முடியாமல் போகுமா? பெவின் பணிகிறார்—தயங்கித்தயங்கிச்செல்லுகிறார் பாசிசப்படுகுழிக்கு! டாலர் கட்டளை இடுகிறது—ஸ்டர்லிங், -கூடா நட்பின் பலனை - விரும்பாத நிலையிலும், வளைந்து கொடுக்கிறது! டாலரின் நேசத்தை நாடுவோருக்கு இது ஒரு எச்சரிக்கையாகும்!

பிராஸ்கோவிற்கு, பந்தியிலே இடமளிக்கப் படுகிறது! விருந்திலே விஷம் கலக்கப்படுகிறது! மக்களாட்சிப் பண்பு தொலைவது, இதன் விளைவு!

விஞ்ஞானம் அங்கே வளரும் விதம்!

அமெரிக்காவின் நடுத்தரப் பள்ளி உயிர் நூல் ஆய்வுச்சாலையில், மாணவர்கள் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கும் காட்சியே மேலே காட்டப்பட்டிருப்பதாகும். ஒரு பையன் நுண்ணோக்காடி (மைக்ராஸ்கோப்) மூலம் பார்த்துக்கொண்டிருக்கிறார், மற்ற இரு பையன்கள் அந்தக் கருவியின் மூலம் பார்க்க காத்துக்கொண்டிருக்கிறார்கள். மாணவர்கள் இயற்கை நூலறிவும், பொருள் நூலறிவும் பெறவேண்டி, அமெரிக்கப் பள்ளிகளில், புத்தம் புதிய விஞ்ஞானக் கருவிகள் தேவையான அளவுக்கு வைக்கப்பட்டிருக்கின்றன.

நாட்டுக்குடையோர் நலிகிறார்கள்! குடிபுகுந்தோர் கும்மாளமடிக்கிறார்கள்!

—(0)—

தாய் கிண்ணப்பிச்சை எடுக்க மகன் கோ தானம் வழங்குவதா?

பர்மா அகதிகளின் அழுகுரல் :: ஆளவந்தார்களின் செவி புகாததேன்?

சென்னையில் தங்கியுள்ள பர்மா இந்திய அகதிகளுக்கு அவர்கள் பர்மாவிலிருந்து வெளியேறி சென்னைக்கு வந்து தங்கியுள்ள இந்நாள் வரை, சென்னை சர்க்கார், தலைக்கு ரூ 4. வீதம் வாரத்திற்கு ஒரு தரம் அளித்து வந்தனர் என்றும், அதை திடீரென நிறுத்தி விட்டார்களென்றும், பர்மா இந்திய அகதிகள் கமிட்டி காரியதரிசி அறிவிக்கிறார்.

சென்னை சர்க்கார் பாகிஸ்தான் அகதிகளுக்கு அளித்துள்ள வசதிகளைப் போல் தங்களுக்கும் வசதியளிக்க அக்கறை செலுத்தாமல் போன போதிலும், ராஜாசர். ராமசாமி முதலியார் சத்திரத்தின் தர்மகர்த்தா திரு எஸ். வி. ராமகிருஷ்ண முதலியார் கருணை கூர்ந்து இடவசதி அளித்திருப்பது மறக்க முடியாத காரியமென்று கூறி, அவர் நன்றி தெரிவித்துக் கொள்கிறார்.

50 பேர் கொண்ட 9 குடும்பங்கள் இச்சத்திரத்தில வசித்து வருகின்றனவென்றும், அவர்களிலே மிக நெருக்கடியானதாக உள்ளதென்றும், பலர் பதினைந்து நாட்களாக அன்ன - ஆகாரமின்றி,-பட்டினி கிடந்து மரணப்படுக்கையில் கிடக்கிறார்களென்றும், அவர் அறிவிக்கிறார்.

ஆகவே பொது மக்கள் அவர்கள் நலனை கவனித்து உதவி செய்ய முன்வர வேண்டுமென்று அவர் பொது மக்களை வேண்டிக்கொள்கிறார்.

சத்திரத்தில் வந்து அவதிப்படுகிறவர்கள் வயிறுப்பிழைப்புக்காக பல ஆண்டுகளுக்கு முன் பர்மா சென்ற தமிழர்கள் ஆவார்கள். இன்று அவர்கள் தங்கள் சொந்த நாட்டில் ஆதரிப்பாரற்று சத்திரத்தில் அல்லல் பட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகக் கொடி ஏற்று விழா

திருச்சேறை, செப். 29—

இன்று மாலை 5 மணிக்கு திருச்சேறை மெயின் ரோடு திருப்பத்தில், செயலாளர் தோழர் பா. செங்குட்டுவன் அவர்களால் தி. மு. கழகக் கொடியேற்று விழா நடைபெற்றது. எனத் தோழர் கோபால்சாமி (விளம்பர உறுப்பினர்) அறிவிக்கிறார்.

மூட வழக்கத்தின் முடை நாற்றம்

சென்னை கோபாலபுரம் லாயிட்ஸ் தெருவில் உள்ள ராம சுப்பையர் வீட்டில் வேலை செய்யும் பூங்காவனம் என்னும் 35 வயதுடைய மாதும, 25 வயதுடைய வீராசாமி என்னும் தோட்டக்காரனும், அவ்வீட்டில் ஒரு தேங்காய் திருடு போய் விட்ட காரணத்துக்காக, கொதிக்கும் எண்ணெயில் கைவிடுமாறு வற்புறுத்தப்பட்டு, அதன் பலனாகக் காய மடைந்து ஆஸ்பத்திரியில் சேர்க்கப் பட்டனர். தேங்காய் காணப் படாததால் இவ் வேலைக்காரர்கள் திருடி யிருப்பரென ஐயம் ஏற்பட்டு, திருடவில்லை என்றால், கொதிக்கும் எண்ணெயில் கை விட்டுத் தங்கள் நிரபராதத் தன்மையைக் காட்டுமாறு வற்புறுத்தப்பட்டதன் மீது இவ்வாறு நடந்துள்ளது போலும்! திருடு, கோரம் முதலிய குற்றங்கள் சுமத்தப்பட்டவர்கள் நிரபராதிகளாயின் கொதிக்கும் எண்ணெயில் கை தோய்த்தால் வேகாதென்பது புராணம் போதிக்கும் தத்துவம். அதன்படி நடைபெற்றிருக்கிறது போலும் இக் நிகழ்ச்சி.

இத்தகைய புராண — சாஸ்திர மூடத்தனங்களை அடியோடுபோக்க அரசாங்கம் முன்வரவேண்டும். இத்தகைய மூடச் செயல்களுக்குக் காரணமாயிருப்பவர்கள் எவ்வளவு உயர்ந்த அந்தஸ்துடையவர்களாயினும், கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டும். அப்படிச் செய்யவில்லையெனின், நாட்டை அறியாமைப் படுகுழியிலிருந்து புராணசாஸ்திர மூடக் கொள்கைப் பிடியினின்று தப்புவிக்கமுடியாது.

வேலைக்காரர்கள் என்ற காரணத்துக்காக, கொதிக்கும் எண்ணெயில் கைதோய்க்கச் செய்தவர்களுடைய உள்ளம் எத்தகையதாயிருக்கும் என்பதை அரசாங்கம் சிந்திக்க வேண்டுகிறோம். மனிதருக்கு இத்தகைய கடினசித்தம உண்டுபண்ணும் தத்துவங்கள் நாட்டில் நடமாடலாமா என்று கேட்கிறோம். இத்தத்துவங்கள் மீண்டும் தலையெடுக்க முடியாவாறு ஆழக் குழி தோண்டிப் புதைக்கப் படவேண்டும். இம்மூடத்தத்துவங்களை நடைமுறையில் கொணர்வோர் கடுந்தண்டனைக்கு உள்ளாக்கப்படவேண்டும்.

கற்பவரில்லாக் கலாசாலைகள்

ஓடாத ரயில் வண்டி, பாடாத கிராமபோன் முதலியவைகளைப் போன்றது கற்பவரில்லாக் கலாசாலைகள் என்பதும், சாதாரணப் பள்ளிக்கூடம் என்றாலே அதில் ஏராளமானவர்கள் படிப்பர். உயர்தரப் பள்ளிக் கூடம், கல்லூரி, கலாசாலை என உயர உயர அவற்றில் இடம் கிடைக்க வில்லையே என வருந்தி வீடு திரும்புவோர் இருக்க கூடிய அளவுக்கு மாணவர்கள் பெருகிப் படிக்கின்றனர்.

இப்படிப்பட்ட கல்வி நிலையங்களுக்கு, அரசாங்கம் பண உதவி செய்வதும, இவ்வாறு மாணவர்கள் விரும்பி வந்து சேர்ந்து படிக்கக் கூடிய பல புதிய கல்வி நிலையங்களைத் துவக்குவதும், துவக்குவோருக்கு உதவி செய்வதும் அறிவுடையோர் செயலாகும்.

ஆனால் 10 மாணவர்களை வைத்துக் கொண்டு, அதற்குப் பெயர் கலாசாலை என்று கூறிக்கொண்டு, அக்கலாசாலைக்கு அரசாங்கம் பொருளுதவி செய்ய வேண்டுமென்று தொல்லை கொடுத்துக் கொண்டு திரியும் கோஷ்டியை என்ன வென்பது? இத்தகைய கோஷ்டிகள் பல இன்று நம் நாட்டில் பெருகிவிட்டன.

தமிழ் நாட்டில் உள்ள சமஸ்கிருதக் (காலேஜ்) கலாசாலைகள், கல்லூரிகள் முதலியவற்றின் கணக்கெடுத்து, அவற்றில படிக்கும் மாணவர் தொகை என்ன? படிப்பின் திட்டம் என்ன? அதனால் மாணவர் அடையும் பலன் என்ன? இக்கலாசாலைகளை வைத்திருப்பதால், நாட்டுப் பொதுமக்களின் பணத்திற்காகும் செலவென்ன? என்பவற்றை அரசாங்கம் ஒரு நாளேனும் கணக்கெடுக்கவேண்டுமென்று எண்ணியதுண்டா? கல்வி மந்திரியாக இன்றுள்ள தோழர் மாதவமேனனுக்குச் சமஸ்கிருதக் காதலிருக்கலாம். அத்தனிமனிதரின் காதலை முன்னிட்டு, சமஸ்கிருதக் "காலேஜ்"களை அவற்றின் போக்கில்விட்டுவிட்டு, அரசாங்கப் பணத்தையும் அவற்றிற்கெனச் செலவழித்தல் மிக மிகக் கண்டிக்கப்பட வேண்டிய செயலாயிருக்கிறது.

திண்ணைப் பள்ளிக்கூடமாயிருந்தால்கூட நாற்பதைம்பது மாணவர்கள் படிக்கின்றார்களென்றால், பத்தே மாணவர்களைக் கொண்ட ஸ்ரீ பெரும்புதூர் சமஸ்கிருதக் "கலாசாலை" அரசாங்கத்திடம் மானிய உதவி கோரும் அளவுக்குத் துணிவு பெற்றுள்ளதிலிருந்து என்னநினைக்க வேண்டியிருக்கிறது.

சமஸ்கிருதத்துக்கு வெளிப்படையாகவோ, உள்ளவாகவோ உதவி செய்யக்கூடியவர்கள் அரசாங்கத்தில் இருப்பதால், இந்தக் காலேஜ்களுக்குப் பண உதவி கிடைக்கும் என்ற நம்பிக்கைத்தானே இதற்குக் காரணம். அரசாங்கம் பட்சபாதமின்றி நேர்மையாகநடந்துகொள்ள விரும்புமானால், இந்தக் காலேஜ்களை மூடிவிட்டு, மாகாணத்தில் எங்காவது ஒருமூலையில் ஒரே பள்ளியை சமஸ்கிருதத்திற்கென ஒதுக்கி, சமஸ்கிருதம படிக்க விரும்புவர்களை அதில் படிக்கச் செய்யலாம். அதைவிட்டு, 10 பேர் காலேஜுக்குப் பண உதவி செய்தால், திண்ணைப்பள்ளிக்கூடங்கள் எல்லாம் காலேஜ்- கலாசாலைகளாக மாறி, பின் அரசாங்கத்திடம் பண உதவி கோரத் துவங்கிவிடும் என்பதை அரசாங்கமும் சமஸ்கிருதக் காதலர்களும் உணர வேண்டுகிறோம.

திராவிட முன்னேற்ற வாலிபர் கழகம் பொள்ளாச்சி

பொள்ளாச்சி, செப். 26.—

24—9—49 இரவு 9 மணி அளவில் திராவிட வாலிபர் கழகத்தின் செயற்குழு கூட்டம் தலைவர் அ. ச. பாலு தலைமையில் கூடி அக்கழகத்தைக் கலைத்து விட்டு திராவிடமுன்னேற்ற வாலிபர் கழகம் துவக்குவதென ஒருமனதாகத் தீர்மானிக்கப்பட்டு. தோழர் P. N. இராமானுசம் தலைமையில் திராவிட முன்னேற்ற வாலிபர் கழகம் ஆரம்பிக்கப்பட்டு தோழர் அ. ச. பாலு செயலாளராகவும, க. சின்னதுரை துணைச் செயலாளராகவும்; தோழர் P. N. இராமானுசம் விளம்பர உறுப்பினராகவும், கா. மயில் சாமி நிதி உறுப்பினராகவும், கோ. கோபால் கழகத்தின் திருவள்ளுவர் படிப்பகச்செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். கழகவளர்ச்சியைப் பற்றி தோழர்கள் கோபால், இளங்கோவன், கந்தசாமி நி. மயில் சாமி ஆறுமுகம், அ. ச. பாலு, க சின்னத்துரை P. N இராமானுசம் முதலியோர் பேசிய பின் கூட்டம் இனிது கலைந்தது எனச்செயலாளர் அ. ச. பாலு எழுதுகிறார்.

திராவிட முன்னேற்றக் கழகங்கள்

களம்பூர்—கிளை

களம்பூர், செப். 25—

24-9-49ல் களம்பூர் திராவிடர் கழகத்தோழர்கள் தோழர் ச. மொ. அண்ணாமலை அவர்கள் இல்லத்தில் தோழர் வி. செ. சின்னக்கண்ணு அவர்கள் தலைமையில் ஒன்று கூடி, திராவிடர் கழகத்தைத் திராவிட முன்னேற்றக் கழகமாக மாற்றி அமைத்தார்கள். புதிய செயற்குழு பின்னர் தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—வி. செ. சின்னக்கண்ணு. பொருள் உறுப்பினர்;—எஸ். பச்சியப்பன். விளம்பர உறுப்பினர்:—தெ. கொ. தங்கவேல். ஏனைய செயற்குழு உறுப்பினர்:—ச. மொ. அண்ணாமலை, க. கணேசன், எ. கோவிந்தசாமி, கே. அர்ச்சுனன், கே. துரைசாமி.

பின்பு சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுக் கூட்டம் இனிது கலைந்தது. என விளம்பர உறுப்பினர் எழுதுகிறார்.

* * *

கடையநல்லூர்—கிளை

கடையநல்லூர், செப். 26.—

இவ்வூர் திராவிடர் கழக உறுப்பினர்கள் கூட்டம் 25-9-49 அன்று நடைபெற்றது. கூட்டத்திற்குத் தோழர் சே. எ. சுப்பையா அவர்கள் தலைமை வகித்தார்கள்.

நகர திராவிடர் கழகத்தை, திராவிட முன்னேற்றக் கழகம்-கடையநல்லூர் கிளை என மாற்றுவதெனத் தீர்மானிக்கப்பட்டது. ஒரு புதிய செயற்குழு ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:-சி. சண்முகம், நிதி உறுப்பினர்:—சி. செல்லையா, விளம்பர உறுப்பினர்:—ஆ. திராவிடமணி.

ஏனைய செயற்குழு உறுப்பினர்:-சல். ஆதினம், எஸ். ஆர். செயலழகன், ப. தமிழ்ப்பித்தன், கே. எஸ். முகம்மது இஸ்மாயில், முகம்மதலி, இ. நடராஜன், அ. சுப்பையா, இரா. தமிழரசு.

பின்னர் தோழர் முகம்மதலி "உறுப்பினர்கள் பொறுப்பு" என்பது பற்றிச் சிறிது நேரம் பேசினார். செயலாளர் நன்றிகூறக் கூட்டம் இனிது முடிந்தது. எனச் செயலாளர் அறிவிக்கிறார்.

* * *

குறிஞ்சிப்பாடி—கிளை

குறிஞ்சிப்பாடி, செப். 29.—

குறிஞ்சிப்பாடி திராவிடர் கழக நிர்வாகக் கமிட்டிக்கூட்டம் 26-9-49 இரவு 9 மணிக்குத் தோழர் அ. ப. வைத்திலிங்கம் அவர்கள் தலைமையில் கூடி, கொள்கையினின்றும் வழுக்கி விழுந்த பெரியாரின் தலைமையில் இனிக்கழகம் செயலாற்றுவது, கொள்கைக்கும் ஜனநாயக முறைக்கும் மாறுபாடானதாகும் என்று கருதப்பட்டு, திராவிடர் கழகம் கலைக்கப்பட்டதாக முடிவு செய்யப்பட்டது. உடன் தோழர் து. குழந்தைவேல் அவர்கள் தலைமையில் திராவிட முன்னேற்றக் கழகம் அமைக்கப்பட்டது. செயற்குழு ஒன்றும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—க. நாராயணசாமி பொருள் உறுப்பினர்:—வி. பட்டாபி. விளம்பர உறுப்பினர்:—பா. சக்ரபாணி.

ஏனைய செயற்குழு உறுப்பினர்:-இரா. சாம்பசிவம், அ. ப. வைத்திலிங்கம், குழந்தைவேலு, செ. சொக்கலிங்கம், பொ. நாகவேலு, இரா. குப்புசாமி, பொ. கோவிந்தராசலு, ப. கோவிந்தன், அ. ந. சப்பிரமணியம், ஆ. சாமிவேல்.

16-10-49ல் திராவிட முன்[illegible]

டம் முடிவுற்றது, எனச் செயலாளர் எழுதுகிறார்.

* * *

சென்னை நுங்கம்பாக்கம்—கிளை

சென்னை, செப். 28—

27—9—49ம் நாள் மாலை சென்னை நுங்கம்பாக்கம் வட்டாரத் திராவிடர் கழகம் கூட்டப்பட்டது. திராவிடர் கழகம் என்று இருந்ததை திராவிடர் கழகத் தலைவர் பெரியார் ஈ. வே. ராமசாமி அவர்களுடைய சர்வாதிகாரப் போக்கு பிடிக்காத காரணத்தால் "திராவிட முன்னேற்றக் கழகம்" என மாற்றப்பட்டது. புதிய செயற்குழு ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—வ. சங்கர நாராயணன் துணைச் செயலாளர்:—அ. சுந்தரன், பொருள் உறுப்பினர்:—ப. செல்வராசு, விளம்பர உறுப்பினர்:—எஸ். பாலசுந்தரம்.

ஏனைய செயற்குழு உறுப்பினர்கள்:—பச்சையப்பன், கி. சுப்பிரமணியன், முத்து, எம். பெருமாள், பா. கோவிந்தராசன், டி. சொக்கலிங்கம், ஆர். ராமகிருட்டிணன், சுவந்தக் கண்ணன், பி. வி. இராமானுசம். மதிமன்றத்தின் கையிருப்பு ரூ. 14-6-0 (ரூ பதினான்கு அணா ஆறு), திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மாற்றப்பட்டது. என விளம்பர உறுப்பினர் தெரிவிக்கிறார்.

* * *

ஓடசல்பட்டி—கிளை

ஓடசல்பட்டி, செப். 28

29-9-49 மாலை இவ்வூரில் நடைபெற்ற திராவிடர் கழக உறுப்பினர்கள் கூட்டத்தில் திராவிடர் கழகம் கலைக்கப்பட்டு, பழைய 25 அங்கத்தினர்களைக் கொண்ட கழகம் திராவிட முன்னேற்றக் கழகம் என மாற்றி அமைக்கப்பட்டது. தோழர் டி. நாகப்பன் அவர்களைச் செயலாளராகக் கொண்ட செயற்குழு ஒன்று நிறுவப்பட்டது. கழகத்தின் துவக்க விழாவை உயரிய முறையில் கொண்டாட முடிவு செய்யப்பட்டது. எனச் செயலாளர் எழுதுகிறார்.

* * *

சென்னை புரசை—கிளை

சென்னை, செப். 29

28-9-49 மாலை புரசைவாக்கம் பெரியசாலை (பால்டாணு மேல் மாடி)யில் திராவிட முன்னேற்றக் கழகம் தோற்றுவிக்கப்பட்டது. செயற்குழு ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—ஆ. ச. சுந்தரமூர்த்தி, பொருள் உறுப்பினர்:—சி. இராமச்சந்திரன், நிதி உறுப்பினர்:—இ. சுப்பிரமணியம்.

ஏனையசெயற்குழு உறுப்பினர்:-கே. பி. சுந்தரம், என். வேதாசலம், கே. திருவேங்கடம், பி. வீராசன், ஜி. ஆர். வெங்கட்டராமன், டி. டி. இராமானுசன்.

அடுத்த செயற்குழுக் கூட்டத்தை 9-10-49 ஞாயிறன்று காலை 10 மணிக்குக் கூட்டுவது என்பதாக முடிவு செய்யப்பட்டு, நன்றி கூறக் கூட்டம் இனிது முடிந்தது. என விளம்பர உறுப்பினர் அறிவிக்கிறார்.

* * *

தேனி—கிளை

தேனி, செப். 29

மதுரை மாவட்டம் தேனி நகர திராவிடர் கழக உறுப்பினர்கள் 28-9-29 காடி, திராவிடமுன்னேற்றக்கழக அமைப்பு ஏற்படுத்தினார்கள். தேனி நகர திராவிடர் கழகத்தை நகர திராவிட முன்னேற்றக் கிளைக் கழகமெனமாற்றி அமைத்துப் பணியாற்றுவது என முடிவு செய்யப்பட்டது. மேலும் சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு, செயற்குழு ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—இரா. பழனிச்சாமி, துணைச்செயலாளர்:—சோ. வெற்றி அரசு, நிதி உறுப்பினர்:—சா. சி. நாதன், விளம்பர உறுப்பினர்:—ஆ. கருப்பையா, மா. துரைச்சாமி.

ஏனைய செயற்குழு உறுப்பினர்:—பெ. பு. நடராசன், மு. நாராயணசாமி, ஆ. தேவராசன், பூ. சின்னன், து. கருணையானந்தம், அ. வேணுகோபால். எனச் செயலாளர் அறிவிக்கிறார்.

* * *

சென்னை பெத்துநாயக்கன் பேட்டை-கிளை

சென்னை, செப். 30—

சென்னை பெத்துநாயக்கன் பேட்டை திராவிடர் கழக செயற்குழுக் கூட்டம் 29—9—49 இரவு 8 மணிக்கு, லாயர் சின்னதம்பி முதலித் தெரு 4 வது எண்ணுள்ள இல்லத்தில் தோழர் என். வி. நடராசன் தலைமையில் நடைபெற்றது.

வந்திருந்த உறுப்பினர்கள்:—என். வி. நடராசன், டி. பரமசிவம், கே. எஸ். ரத்தினம், சி. என். கணேசன், டாக்டர். சி. கணேசன், கே. எஸ். திருநாவுக்கரசு, எஸ். சாம்பசிவன்.

பெரியார் அவர்களின் திருமணப் போக்கும் அதன் காரணமாக அவர் கையாண்ட தன்மைகளும்; ஜனநாயக முறைக்கும், தமிழின நலனுக்கும் கேடு பயப்பதாய் இருப்பதால் அவரது தலைமையில் நம்பிக்கையில்லை என்றும், 17-9-1949 கூடிய மாகாண நிர்வாகக் கமிட்டி உறுப்பினர்களின் முடிவுக்கு ஏற்ப இன்றுமுதல் பெத்து நாயக்கன் பேட்டை திராவிடர் கழகம் என்பதை "திராவிட முன்னேற்றக் கழகம்" என்று மாற்றி அதற்கேற்ப பணியாற்றுவது என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பின்பு செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—டி. பரமசிவம், நிதி உறுப்பினர்:—எஸ். சாம்பசிவம் விளம்பர உறுப்பினர்:—சி. என். கணேசன்.

ஏனைய செயற்குழு உறுப்பினர்:-என். வி. நடராசன், டி. பரமசிவம், கே. எஸ். ரத்தினம், சி. என். கணேசன், டாக்டர். சி. கணேசன், கே. எஸ். திருநாவுக்கரசு, எஸ். சோமசுந்தரம், எஸ். சாம்பசிவம், கே. என். சிவானந்தம், எம். எஸ். கதிர்வேலு.

சென்னை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகக் கமிட்டிக்கு பெத்துநாயக்கன் பேட்டை திராவிட முன்னேற்றக்கழகத்தின் பிரதிநிதிகளாகத் தோழர்கள் என். வி. நடராசன், டாக்டர் சி. கணேசன் ஆகியவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். செயற்குழுவுக்கு மேலும் உறுப்பினர்களைச் சேர்த்துக்கொள்ள செயற்குழுவிற்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. என விளம்பர உறுப்பினர் அறிவிக்கிறார்.

* * *

சென்னை மவுண்ட்ரோடு-கிளை

சென்னை, செப். 30—

29—9—49 வியாழக்கிழமை இரவு 10 மணிக்கு 30 எண் அப்பாவு கிராமணித் தெரு, கோவிந்தசாமி கடையில், திராவிட முன்னேற்றக் கழகம் மவுண்ட்ரோடு கிளை அமைக்கப்பட்டது. செயற்குழு ஒன்றும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:— கே. வேதாசலம் பொருள் உறுப்பினர்—ஜி. கிருஷ்ணன். விளம்பர உறுப்பினர்—என். கிருஷ்ணன். அமைப்பாளர்—சி. ரங்கநாதன்.

ஏனைய செயற்குழு உறுப்பினரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்

கழகத் துவக்க விழாவை 22-10-49க்குள் நடத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டது. எனச் செயலாளர் தோழர் கே. வேதாசலம் எழுதுகிறார்.

* * *

கோவை—நகரக் கிளை

கோவை, செப். 26—

25-9-1949 ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு கோவை நகர திராவிடர் கழக உறுப்பினர் கூட்டம் கழகத்தலைவர் தோழர் என. சின்னசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கீழ்க்கண்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு கோவை நகர திராவிடர் கழகம் கலைக்கப்பட்டது.

தீர்மானம்:—

திராவிடர் கழகத்தின் தலைவர் திரு ஈ. வெ. ராமசாமி அவர்கள் கழகக் கொள்கைக்கு மாறாக திருமணம் செய்து கொண்டபடியாலும், அனைவருடைய வேண்டுகோளையும் அலட்சியப் படுத்தினதாலும், அவர் பேரிலும் தகுதியற்ற சொற்றொடர்களைப் பிரயோகித்து வந்தமையினாலும் அவர் தலைமையில் உள்ளதாகக் கூறிக்கொள்ளப்படும் திராவிடர் கழகம் என்கிற அமைப்பின் மூலமாய் பணியாற்றுவதும் அவரது தலைமையை ஏற்றுக்கொள்வதும் சாத்தியமில்லையாகையால் இக்கோவை திராவிடர் கழகம் என்கிற அமைப்பைக் கலைத்துவிடுவதெனத் தீர்மானிக்கிறது.

கோவை நகர திராவிடர் கட்டடத்தில் 25—9—49 ஞாயிறு காலை 11 மணிக்கு திராவிட முன்னேற்றக் கழக அமைப்புக் கூட்டம், தி. மு. க. தலைமைக் கழக நிர்வாகக் குழு உறுப்பினர் தோழர் எ. பொன்னுசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கோவை நகர திராவிடர் கழகம் "திராவிட முன்னேற்றக் கழகம்—கோவை நகர கிளை" என்று மாற்றி அமைக்கப்பட்டதால் புதிய செயற்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அவர்கள் வருமாறு:—எ. பொன்னுசாமி, என். பிள்ளாரி, சி. கே. சுப்பிரமணியம் (இம்மூன்றும் கட்சிக் கமிட்டியின் சார்பாக பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப் பட்டதுடன், இந்த மூன்று ஸ்தானங்களையும் [illegible] ஸ்தானங்களாக ஆக்கப்பட்டன.

பு. பாரதிசெயபால், கே. எல். செழியன் (மாணவர் கழகப் பிரதிநிதிகள்), எம். கனகரத்தினம் (வடகோவைக்கழகம்—7 வது வார்டு) சி. வி. கோபால் (உப்பிலிபாளையம்-8வது வார்டு), சுடையப்பன் (ராமநாதபுரம்-6வது வார்டு), எஸ். பி. ஆரோக்கியசாமி (புலியகுளம்-5வது வார்டு) ஆர். சதாசிவம் (செல்வபுரம்-26வது வார்டு) எம். கண்ணப்பன், கே. ராமு (குனியமுத்தூர்), ஆர். சுகுணன் (16வது வார்டு), கே. சிவசாமி (22வது வார்டு), சி. ஜே. கிருஷ்ணன் (பங்கசபாண்டு உசம்பெனி தொழிலாளர்கள் சார்பாக), எஸ். டி. சிதம்பரம் (19வது வார்டு), பி. பாலசுந்தரம், என். பி. சாமி (14வது வார்டு), சி. சீனிவாசன், எ. லத்தீப், சி. ஆர். மல்லிகார்ஜுனன் (12வது வார்டு), எம். அய்யாசாமி (13வது வார்டு), ஆர். கே. வேலாசாமி (10வது வார்டு), எஸ். எ. ராஜமாணிக்கம் (25வது வார்டு), என். மருதாசலம் ஆர். முனுசாமி, (9வது வார்டு), எஸ். சின்னப்பன் (18வது வார்டு), எம். பட்டிலிங்கம், எம். எ. நடராஜன், வே. கிருஷ்ணமூர்த்தி (11வது வார்டு), என். காசிம் (23வது வார்டு), கே. ஆர். ராயப்பன் (மேட்டுப்பாளையம் ரோடு—9வது வார்டு), சுகுணவேல் (24வது வார்டு).

செயலாளர்—எஸ். எ. ராஜமாணிக்கம் நிதி உறுப்பினர்—எ. பொன்னுசாமி; விளம்பர உறுப்பினர்—வே. கிருஷ்ணமூர்த்தி. நிறைவேற்றப்பட்டத் தீர்மானங்கள்:—

1. "திராவிடர் கழகம்" இன் பெயரை "திராவிட முன்னேற்றக் கழகம்-கோவை நகரக்கிளை" என்ற பெயரில் மாற்றப்பட்டதால் டைக்கைகள் எல்லாவற்றையும் திராவிட முன்னேற்றக் கழகத்துக்குக் கட்டுப்பட்டதாக ஆக்கிக் கொள்வது என்று இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

2. இக்கழகத்தின் நிர்வாகக் குழுவுக்கு ஸ்தானங்களைக் கழகச்சட்டத்தைக் கமிட்டிக்கு [illegible] அளிப்பது என இக்கூட்டம் தீர்மானிக்கிறது

3. கழகத்தின் துவக்கவிழாவை அக்டோபர் 16ம் நாள் [illegible] [illegible] நடத்துவதெனவும் அதற்கு [illegible] தோழர்களிடையே வசூல் செய்வதெனவும் தீர்மானிக்கிறது.

மேலும் இரண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுக் கூட்டம் இனிது கலைந்தது என விளம்பர உறுப்பினர் அறிவிக்கிறார்.

* * *

கூடலூர்—கிளை

கூடலூர், செப். 92—

கூடலூர் திராவிடர் கழக அலுவலகத்தில் தோழர் வி. பாபன் அவர்கள் தலைமையில் 28-9-49ல் கழக முக்கியஸ்தர்கள் கூடி, இலட்சியத்துக்கு இழுக்கு இழைத்த திராவிடர்கழகத்தலைவர் ஈ. வெ. ரா. மீது நம்பிக்கையில்லை எனவும், செப்டம்பர் 17ல் சென்னையில் கூடிய பெரும்பான்மையான மத்திய திராவிடர்கழக நிர்வாக உறுப்பினர்களின் நேர்மையான முடிவை வரவேற்று திராவிட முன்னேற்றக் கிளைக்கழகம் அமைப்பதென்றும் முடிவு செய்யப்பட்டு, புதியசெயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—எம். அழகு, நிதி உறுப்பினர்:—என். டி. பகவதிராசு, விளம்பர உறுப்பினர்:—எல். இராம[illegible] மீ. அமைப்பாளர்:—வி. பரமசிவம்.

ஏனைய செயற்குழு உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். உறுப்பினர் சேர்த்தல், நிதி திரட்டுதல், அக்டோபர் 16ல் துவக்க விழா நடத்த ஆவன செய்தல் ஆகியவைகளைக் கவனிக்க தோழர்கள் கே. வி. டி. சின்னராமசாமி, வி. பி. சின்னராசு, எம். சுருளிவேடவர் ஆகியோர் பொறுப்பாளர்களாக நியமிக்கப்பட்டனர். பின்பு நன்றிகூற கூட்டம் இனிது முடிந்தது. எனச் செயலாளர் எழுதுகிறார்.

விதவை மணம்

குனியமுத்தூர், செப். 29.—

திருப்பூர் சவளகுல வேளாள (சேர்வைக்காரர்) சமூகத்திலேயே முதன் முறையாக தோழர் எ. சுந்தரத்திற்கும், தோழியர் எம். வேலுமணி அம்மாளுக்கும் (விதவை) கோவையில் பதிவுமணம் நடைபெற்றது. இதன் வினைவாக ஆயிரம் ஒன்று வரப்பெற்றோம். மகிழ்ச்சி! [ஆ-ர்]

வெளிவந்துவிட்டது

திருக்குறள் – குழந்தை யுரை

"இராவணகாவியம்" ஆசிரியரின் ஆராய்ச்சிமிக்க விரிவுரை! எளிய நடை!

540 பக்கம். அழகிய அட்டை விலை 4-0-0

மொத்தமாக வாங்குவோர்க்குத் தக்க கழிவுண்டு.
முன்பணம் அனுப்புவோர்க்கு அஞ்சல் கூலி இல்லை.

தேவைக்கு:- சிவலிங்கவிலாசம் புத்தகசாலை, ஈரோடு.

குறிப்பு:— 'மாலை மணி' ஏஜண்டுகளிடமும் கிடைக்கும்.

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street, Madras-1